| Spl S.CNo. | 17/2022 (CC No.3/2018) | Deposition of | PW. 71 (LW. 277) |
|---|---|---|---|
| Name | Tr. Balachandru | Date | 25.07.2025 |

**1 முதல் 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். 1 முதல் 5 எதிரிகளின் வழக்கறிஞர்களும் ஆஜராகியுள்ளார்கள்.**

**1 முதல் 5 எதிரிகளுக்கான பொதுவான குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் 11.53 A.M**

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். PRS ground க்கும் ரேஸ் கோர்சிற்கும் இடையே 2 கிமீ தூரம் இருக்கும் என்றால் எவ்வளவு கிமீ என்று தெரியாது, அருகாமையில் உள்ளது என்று தெரியும். எனக்கு சிடியில் பதிவிறக்கத்திற்கும் பதிவேற்றத்திற்கும் வித்தியாசம் தெரியுமா என்றால் சிடியை பதிவிறக்கம் செய்ய எனக்கு தெரியாது. நான் இந்து முன்னணியில் மாவட்ட பொறுப்பு வகித்து வருகிறேன். என்னை 14.06.2021 அன்று தேசிய புலனாய்வு முகமை காவல் துறையினா் அழைத்து நான் செல்லவில்லை. நான் தேசிய புலனாய்வு முகமை அலுவலகத்திற்கு ஒரே இருசக்கர வாகனத்தில் தனபாலுடன் சென்றேன். தனபாலுடன் செல்லும் போது சிடியுடன் சென்றேனா என்றால் தனபால் இரண்டு சிடிக்களை தேசிய புலனாய்வு முகமை காவல் துறையினரிடம் கொடுக்கப் போவதாக என்னிடம் கூறினாா். நான் கையெழுத்துப் போட்டப்படும் நிகழ்விற்கு முன்பாக நான் சிடியை பாா்த்தேனா என்றால் போலீசிடம் கொடுக்கும் போது பாா்த்தேன், தனபாலுடன் செல்லும் போது பாா்க்கவில்லை அதன் பிறகு பாா்த்தேன். நான் கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் சிடி இயங்கும் நிலையில் இருந்ததா என்றால்

எனக்குத் தெரியாது. சிடியை கைப்பற்றும் போது என்னிடம் தேசிய புலனாய்வு முகமை காவல் துறையினர் வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. சிடியை மூடி முத்திரை செய்த பிறகு என்னிடம் தேசிய புலனாய்வு முகமை காவல் துறையினர் கையொப்பம் பெற்றார்களா என்றால் சிடி மேல் தான் கையொப்பம் பெற்றார்கள். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சிடியிலோ இரசீதிலோ கையொப்பம் இடவில்லை என்றாலும், போலீசார் சொல்லிக்கொடுத்ததற்கு ஏற்ப கையொப்பம் இட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் நான் கையொப்பம் இட்டுவிட்டு போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 5 எதிரிகளுக்கான பொதுவான குறுக்கு விசாரணை முடிவடைந்த நேரம் 12.01 P.M**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Sd/-(S.MALARVIZHI)
District and Sessions Judge.
Special Court under the National Investigation Agency Act, 2008,
Chennai @ Poonamallee.